உ

ஸ்ரீ ஆண்டவிநாயகர் துணை.

குண நிதி.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினுமப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"—திருக்குறள்

(All Rights Reserved.)

மலர் க } இரக்தாக்ஷி-ஞூ ஆனி-மீ கஉ { இதழ் க.
1924-ஞூ ஜூன்-மீ 14உ

கடவுள் துதி.

பொருளுங் குலனும் புகழுந் திறனு
மருளு மறிவு மனைத்து—மொருவர்
கருதாவென் பார்க்குங் கறைமிடற்றுய்தொல்லை
மருந்தா வென்பார்க்கு வரும்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

எழ்பெ ருங்கடல் மாநில யெங்குநல் லறமே
சூழ்க வண்டமி ழோங்குக தேங்குக சுருதி
வீழ்க பைம்புயல் விளங்குக வளங்கெழு மனுநூல்
வாழ்க வன்புடை யடியவர் மன்னுமா தவமே.

இப் பத்திரிகையின் நோக்கம்.

இப்பாதகண்டத்திலே எந்நாட்டிலுஞ் சிறந்த நன்னாடாகிய தமிழ் நாட்டிற் பெறுதற்கரிய மானிடப் பிறப்பையுற்ற நம்மவர்கள் கல்வி, அறிவு, நற்குணம், நற்செய்கை முதலியவற்றால் நாளுக்குநாள் நாகரிகத்துடன் அபிவிருத்தியடைந்து வர வேண்டி, தினப்பதிப்பு முதல் மாதாந்த சஞ்சிகை வரையிலுமுள்ள தமிழ்ப் பத்திரிகைகள் பல வெளிவந்துலவுதல் யாவரும் நன்குணர்ந்ததே.

அத்தகைய பரோபகார பத்திரிகைகளின் இடையில், எண்ணிய வெண்ணியாங் கெய்துவார் எய்தும்பதியாகிய இவ்விடைமருதென்னும் திருப்பதியினின்றும் ஓர் மாதாந்தப்பத்திரிகை வெளிவந்து நலமிக்க தன் உதவியை நந்தமிழ்நாட்டிற்குச் செய்தலைக்காணும் வேணவாவுடையார் பலரது முயற்சியால் இது வெளிவந்ததாகும். இப்பத்திரிகை கடவுள்வணக்கம், சாஸ்திரஆராய்ச்சி, சரித்திரஆராய்ச்சி, அச்சில்வாராதசிலநூல்கள், வியாசங்கள், ஆயுர்வேத யுனானிவைத்தியம், விவசாயம், வியாபாரம், பெண்களுக்கானவை, விநோதக்கூற்று, நவீனம், பொது சமாசாரங்கள் முதலிய நலந்தரும் அருங்குணங்களால் நிறைவுடையதாதலால் "குணநிதி" என்னும் காரணப்பெயரையெய்தியதாயிற்று.

உலகியலறிந்த தோழரையும், உயர்நூலறிந்த பெரியரையும், உண்மையுணர்ந்த குரவரையுமொத்தஅரியபத்திரிகைகளையாதரித்து அபிவிருத்திசெய்யும் பேராண்மை வாய்ந்த அன்பர்கள் இதனிடத்தும் தங்கள் திருவுள்ளக்கருணையைச் செலுத்தி, இதன் வளர்ச்சிக்கு இன்றியமையாத நன்மைகளைப் புரிந்து எல்லாம் வல்ல இறைவன் திருவருளையும் வேண்டுவாராக.

சுபம்.

காழிக்கல்வெட்டுக்கள்.

க. பொதுக்குறிப்பு.

சாசனம் இன்னதென்பது.

தொல்லாராய்ச்சி செய்தற்கு உதவும் பல கருவியினும், சாசனம் தேசசரித்திரத்தை உறுதிபெறக் கூறுவதால் முக்கிய பிரமாணமாம். காசுகளிலும் மணிகளிலும் பொறித்துள்ள லிபிகளை அச்சாசனத்தின் ஒரு பகுதியாய் நாணயநூற்கண் ஆராய்வர். இஃது ஒழிந்தசாசனம் என்பனயாவும் அரசியன் முறையில் தனித்தும் கலந்தும் நிகழ்ந்த சம்பவங்கள் மறந்தொழியாது என்றும் விளங்நதற்பொருட்டுச் செப்பேடு சிறுபீடம் கற்பாறை பெருமாளிகை மலைக்குகை கோயிற்சுவர் ஜயஸ்தம்பங்கள் மேலும், சித்திரபீடம் பிரதிமை நடுகற்கட்கீழும், சேஷச் செப்புக்களின் பாலும் செதுக்கியும் மைபூசியெழுதியும், களிமட்கட்டி செங்கற்கள் மேல் முத்திரித்தும், ஸம்ஸ்கிருதம் பாளி பிராகிருதம் மணிப்பிரவாளம் கன்னடம் மராடம் தெலுங்கு தமிழ் முதலிய பாஷைகளின் பல்வேறு காலத்துப் பல்வேறு எழுத்துக்களால், உரைநடை செய்யுள்நடை இவை விரவியனவாகப் பேரரசர்கள் திருவாண்டுகளிலும் பிரசித்தமான அப்தங்களிலும் காலங் குறித்தும் குறிக்கப்படாதும் வெளிப்படுத்திய பிரசுரங்களேயாம்.

சாசன விசேஷம்.

தொல்லரசர் மாட்சிமையைக் காலவரை செய்து வரைந்த நூல் பல இறந்தொழிந்தன. இந்நிலையில் சாசனங்களைப் பொறுதியோடு ஊன்றிப் பார்த்தே நமது தேசசரித்திரமும், அதன் பாற்பட்ட விஷயமும் தலைக்கட்டவேண்டியவையாம். இக்கல்வெட்டுக்கள் அன்றிக் காலம் முதலியவற்றை நிர்த்தாரணம்

செய்தற்குக் கருவிகள் பிற இல. பாரம்பரியம் ஐதிகம் நூல் நாணயங்களால் தேர்ந்த விஷயங்கள் சாசன ரூபமான அத்தாட்சிகளாலே உறுதிபெறுவனவாம். சாசனங்கள் பலவற்றையும் ஒருங்குசேர்த்து ஆராய்ந்து பெற்ற முடிவே ஏற்ற முடிவாம். திருஷ்டாந்தமாக அல்லாகபாத்து, அன்பில், ஆலங்குடி ஆர்ப்பாக்கம், கங்கைகொண்ட சோழபுரம், காஞ்சீபுரம், குஜராத், கொட்டூர், காளஹஸ்தி, கண்டியூர், கோயிலடி, கோயில்வெண்ணி, குற்றாலம், லால்குடி, மஹேந்திரகிரி, மன்னார் சமுத்திரம், மன்னார்குடி, நாய்ச்சியார்கோயில், நாகப்பட்டினம், நேமம், பண்டநல்லூர், பட்டுக்கோட்டை, செந்தலை, சோமூர், ஸ்ரீரங்கம், சுசீந்திரம், சுவாமிமலை, தஞ்சாவூர், தில்லைஸ்தானம், திருநெல்வேலி, திருச்சனம்பூண்டி, திருக்கழுக்குன்றம், திருக்காட்டுப்பள்ளி, திருப்பலாத்துறை, திருப்பழனம், திருவிடைமருதூர், திருவதிகை, திருவையாறு, திருவாரூர், திருவண்ணாமலை, திருவகிந்திரபுரம், திரிசிரபுரம், உக்கல், தாங்கம்பாடி, சீகாழி, திருவெண்காடு, திருச்சாய்க்காடு, ஆச்சாள்புரம், திருக்குருகாவூர், திருக்கோலக்கா முதலிய இடங்களில் அச்சுததேவர், அச்சுதப்பநாயகர், ஆதித்தர் I, ஆதித்தர் II, சோடர், சோழர், தேவராயர், கங்கபல்லவர், கௌதமிபுத்திரர், கோபதிம்மர், ஹரிஹரர் II, ஒய்சளர், கம்பண்ணஉடையார், கிருஷ்ணர் III, கிருஷ்ணராயர், குலசேகரர் I, குலசேகரர் II, குலசேகரபாண்டியர், குலோத்துங்கர் I, குலோத்துங்கர் III, மஹேந்திரவர்மர் I, நந்திவர்மர் I, பல்லவர், பாண்டியர், பராந்தகர் I, ராஜாதிராஜர் I, ராஜராஜர் I, ராஜேந்திரசோழர், ரவிவர்மகுலசேகரர், உருத்திரதாமர், சாளுவசங்கமதேவ மகாராஜர், ஷாஜி, சிம்மவிஷ்ணு, சுந்தரபாண்டியர் I, சுந்தரபாண்டியர் II, ஜடாவர்மர், திருமலை, விஜய நிருபதுங்கவிக்கிரமவர்மர், விக்கிரமசோழர், வீரசோமேச்வரர் முதலியோர் காலத்து வரையப்பட்ட சாசனங்களைக்கொண்டே தஞ்சை ஜில்லாவின் பூர்வ சரித்திரத்தை முடிவுகட்டல்வேண்டும்.

பூர்வ சரித்திரங்களைக் கால விவரத்தோடு காட்ட வல்ல நூல் பலவும் கைதவறிவிட்டாலும், இருநூறு வருஷங்களுக்கு முன் கன்னடபாஷையில் இயற்றிய ராஜாவளிகதை மைசூர் ராஜ்பத்தில் சமணமதம் ஆதிமுதல் வளர்ந்த விருத்தாந்தத்தையும் அந்நாட்டின் ராஜநீதியையும், பலநூறு வருஷங்களுக்கு முன் அவ்விராஜ்யத்தில் தமிழில் எழுதிய கொங்குவேள் மாக்கதை கி. பி. முதல்நூற்றாண்டு தொடங்கி அந்தத் தேசசரித்திரத்தையும், கூறுதற்கு எஞ்சியுள்ளன. சோழபல்லவ பாண்டிய ஆந்திரதேசங்களைப் பற்றிய காலக்கிரம சரித்திரக் குறிப்புகள் பூ சாஸ்திர ஆராய்ச்சிக்குப் பயன்படுகின்றன. தேசசரித்திரத்தைப்பூரணமாகஎழுதுவதற்குவேண்டியவிஷயங்களை ராஜபாரம்பரியம், வம்சாவளி, ராஜாவளி,பட்டாவளி, பிரதானமஹாசார்ய அனுக்கிரம குருபரம்பரை, உத்தியோகபத்திரம், ஓர்வம்சத்து அரசர்களின் புராதன சாதனம், கதை இவற்றிற் பரக்கக்காணலாம். ராஜ சந்ததிகளைக் குறித்துவைப்பது பற்பல நூற்றாண்டுகளாக இந்நாட்டு வழக்கமென்பது புராண இதிஹாஸங்களாலும் பதிற்றுப்பத்து முதலிய புறப்பாட்டுக்களாலும் விளங்கும். அந்நூல்களில் அரசர்களின் உறவுகளையும், திருமுடி அடைவுகளையும், அவர்கள் ஆண்ட வருஷங்களையும், முடிசூடியகாலத்தையும் விவரமாகவும் குறிப்பாகவும் அறியலாம். கீழ் தேசத்துச் சாளுக்கிய அரசர்களது தாமிரபட்டயங்களில் கி.பி. 918முதல் முந்நூறுவருஷம் அரசாண்டுவந்த அவ்வமிசத்துப் பார்த்திபர்களையும், கலிங்கதேசத்து இறுமத்து நாமாக்களில் கி. பி. 390 முதல் அந்நாட்டில் அரசாண்டுவந்த அரசர்களையும், நேபாள தேசத்து வம்சாவளியில் கி. மு. 4000 முதல் கி. பி. 1768வரை அந்நாட்டில் அரசாண்டுவந்த பல மன்னர்களையும் பலபடக் கூறியிருக்கக் காண்கின்றோம். இவற்றில், சில இடைச்செருகற்கு இடம் உண்டானமை கருதத் தக்கது.

(தொடரும்)

ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை.

தமிழ்ப்பண்டிதர், ஸ்ரீகாழி.

தமிழணங்கின் சீர் குன்றக் காரணமென்ன ?

தமிழ் மக்களால் பேசப்படும் பாஷைக்கு தமிழ்ப்பாஷை என்று பெயர். இது தெலுங்கர், கன்னடர், மராட்டியர், துலுவர், மலையாளர், பர்மீயர், சீனர், சிங்களவர், சோனகர் முதலான பல ஜனங்களாலும் பேசப்படுகின்றது. அவர்கள் ஜாதி என்றபோது தாங்கள் நாயுடு என்றும், மராட்டியர் என்றும், பண்டிதன் என்றும் சொல்லிக்கொள்ளுகின்றனர். ஆகவே' ஜாதி ஒருவாறு பாஷையையும் ஒட்டி எற்படுகிறதென்னலாம். ஏனெனில், மராட்டியர் தமிழைப் பேசினாலும் வீட்டில் பேசுவது மஹாராஷ்டிரபாஷையாகையால், அவர்கள் தங்களை மராட்டியர் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். அதுபோலவே துருக்கர் வெளியிற் பொதுவாக வழங்கும் பாஷையைப் பேசினாலும், வீட்டில் துருக்கு, இந்துஸ்தானி அல்லது உருதுபாஷையைப் பேசுகின்றனர். அப்படிக்கில்லாமல், தமிழனோ வீட்டிலும் சரி வெளியிலும் சரி பேசுவது தமிழே. இப்படிச் சுத்தத் தமிழையே எங்கும் உபயோகிப்பவரே தமிழரர்வர்.

இத் தமிழரில், ஆரியரான பார்ப்பனர், சைவரான வேளாளர், குடிகளாய் அன்றுதொட்டு இன்றுகாறும் நிற்கும் தொழிலாளர்களும் சேருவார்கள். பார்ப்பனருக்கு இதுதான் தாய்ப் பாஷையோவெனின், இதுவே தாய்ப்பாஷை. வேறு பாஷை இருக்க நியாயமில்லை. வேறு பாஷையுண்டானால், தெலுங்கர், மராட்டியர்களைப்போல் அப் பாஷையைப் பேசவெண்டும். தமிழ்நாட்டில் வசிக்கும் எத்துணையோ மலையாளப் பார்ப்பனர் மலையாளம் பேசுகின்றனர். தெலுங்கர் தெலுங்கு பேசுகின்றனர். கன்னடர் கன்னடம் பேசுகின்றனர். பண்டிதர் என்னும் மகாராஷ்டிரர் மகாராஷ்டிரம் பேசுகின்றனர். தமிழப் பார்ப்பனர் மாத்திரம் தமிழே பேசுகின்றனர். அவர்களுக்கு ஆரிய

பாஷை கிடையாதோவென்றால், ஆரியமென்றால் ஆரியமென ஒரு பாஷையில்லை. சம்ஸ்கிருதமென ஒரு பாஷை உண்டென்பர். அதன் பொருள் நன்றாகச் செய்யப்பட்டதென்பது. எதனின்றும் நன்றாகச் செய்யப்பட்டதென்பதை ஆராய்ந்து முடிவு காட்டினரை இன்றுவரைக் காணோம். பிரகிருதி என்னும் இயற்கை மொழியைச் செம்மைசெய்தனரா? அன்றித் தமிழ்மொழியைச் செம்மை செய்தனரா? அல்லது வேறு மொழிகளைச் செம்மை செய்தனரா? வென்பது நிச்சயிக்க வேண்டியதொன்றாம்.

இனி அம்மொழி பேச்சுவழக்கி லில்லையோவெனின், அது யாண்டும் எவராலும் பேசப்பட்டதாகத் தெரியவில்லை. எவராவது நமது கனம். பனகால் ராஜா போன்றோர் அப்பாஷையில் தாராளமாகப் பேசக்கூடுமாயினும், அவ்வாறு பேசுபவர்கள் இரண்டொருவரே யன்றி நூற்றுக்கணக்காக அகப்படார். அன்றியும் இவர்கள் பரம்பரையாகத் தொன்றுதொட்டுப் பாராயணம் செய்துவரும் வேதமும் எழுதாக்கிளவி என்றே சொல்லப்படுவது. எப்பொழுது ஒன்றிற்குக் குறியீடு இல்லையோ, அது முற்றுப்பெறாததேயாகும். இன்னும் அது எழுதாக்கிளவியாக விருப்பதால் இன்னவிதமான வடிவில் முதன்முதலில் யாரால் எழுதப்பட்டதென்று சொல்வதற்கில்லை.

வேதத்தைத் தெலுங்கில் எழுதலாம்; இந்துஸ்தானியில் எழுதலாம்; தமிழில் எழுதலாம்; நாகரியில் எழுதலாம். மலையாளத்தில் எழுதலாம். இவைகளாலேயே சம்ஸ்கிருதம் எல்லோராலும் எவ்விதமாகவும் உபயோகப்படுத்தக்கூடிய இரண்டாம் மொழியாகுமேயன்றித் தனித்தியங்குவதன்று. ஆகவே, தென்னாட்டிலுள்ள மக்கள் யாவரும் தமிழ்மொழியைப் பேசியும் எழுதியும் ஆகவேண்டியிருக்கிறதென்பது முடிந்த பொருளாம். இதனாலே தமிழ்நாட்டில் வாழும் பார்ப்பனர் உள்ளிட்டாரும் தமிழ்மொழியைப் புறக்கணித்துப் பிறிதொரு மொழியைக் கைக்கொள்வதற்கில்லை. இந்த உரைநடை தமிழின்சீர் குன்றக்

காரணமாயிருப்பவைகளை எடுத்தெழுதுவதால் குண தோடங்களைக் காட்டவேண்டிய தவசியமாகின்றது. அதற்காக யான் வேற்றுமொழிகளை இழிவுபடுத்திக் கூறுவதாக எண்ணாமல், சொல்லும் பொருள்களைமாத்திரம் கவனிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறாக, இவர்கள் எவ்வாறு புறக்கணிக்கின்றனர் என்று கவனிப்போம். முதன்முதலாக கல்விகற்றோனாயினும், கல்வி இல்லாதவனாயினுஞ் சரி, அறிந்தவனோ அறியாதவனோ எவ்விதமாயினும் தம் மக்களைப் படிக்கச்செய்வதில் கருத்துடையவனாவான். ஆகவே, மக்கள் இப்பொழுது முதல்பாரம் என்று கருதப்படும் 5-வது வகுப்பு வந்தவுடன் தன் பிள்ளை சம்ஸ்கிருதம் பயிலவேண்டும் என்று ஆசைப்படுகிறான். அதற்குற்ற முதற்பாடபுத்தகத்தையோ, வேறு யாரும் எழுதின நெடுங்கணக்குப் புத்தகத்தையோ நாகர எழுத்தில் எழுதப்பட்ட எழுத்தையுடையபுத்தகத்தை வாங்கிக்கொடுத்து வாசிக்கும்படி செய்கிறான். அவர்கள் தனிஎழுத்துக்களையும், கூட்டெழுத்துக்களையும் கற்றுக்கொள்ள 6-மாத காலமாகிறது. அதன் பின்னர் மாமா, தாதா, ராமா, நகுல, வானர என்பதுபோன்ற சொற்களைக்கற்கிறான். இதற்குள் ஒருவருடம் பூர்த்தியாகிறது. இவன் கற்றுக்கொண்டது மூன்று நான்கு எழுத்துக்களாலாய சொற்களைத் தவிர்த்து வேறு ஒன்றுமில்லை. இந்த ஒருவருஷத்திற்குள் பையன் ஏற்கனவே கற்றுக்கொண்டிருந்த தமிழை மறந்துவிடுகிறான். ஏனெனில், இவனுக்குப் பள்ளிக்கூடப்பாடம் சம்ஸ்கிருதமாகிவிட்டது. தமிழ் படிக்கவேண்டிய பிரமேயமில்லை. இதனாலேஇவன் கற்றதையும் மறந்துவிடுகிறான். பிள்ளைகளது ஆசிரியரும் தமிழ் கல்லாது சம்ஸ்கிருதமே கற்றவராகையால், இவருக்கே ஏரா, ஏறு, இறப்பா, இரப்பா, மரமா, மறமா, கரிப்பா, கறுப்பா என்பதுபோன்ற வல்லின இடையின எழுத்துக்களும், இதேமாதிரி டகர ணகரங்கள் உபயோகிக்கத் தெரியாதிருப்பதால், இவர்கள் எங்ஙனம் தமது மாணாக்கர்களுக்குப் போதிக்கவியலும் ? இவர்களாவது தாம் உபாத்தியாயர்வேலையி லமர்ந்துள்ளோமே என்று தமிழைப்

படித்துத் தங்களைத் திருத்திக்கொள்வதில்லை. பெரும்பாலும் பார்ப்பனரே உபாத்திமைத் தொழிலில் அமர்ந்திருப்பதால், அவர்கள் தங்கள் வீடுகளிற்பேசும் திரிசொற்களான தூத்தம் தண், பாத்தையா, கேளுங்கணும், கேளுங்கோ, பார்த்தயளா முதலானவைகளையே பேசிப் பழகுவதினால் பள்ளிக்கூடங்களிலும் அதனையே பேச, அவர்களிடம் கல்விகற்கும் மாணாக்கர்களும் அவ்வாறே பேசிப் பழகுகின்றனர். இப்படிப் பயிலுந் தமிழைத்தவிர ஒருவன் இலக்கணப்பிழை யின்றியும், சொற்சுத்தமாயும் படிக்கப் பழகாததால் அவன் எழுத நேரிடுபவைகளெல்லாம் பிழையுடையனவாகவே இருக்கின்றன.

இவ்வாறு தமிழைப் பிழையுடையதாக எழுதப்பயின்றானோ சம்ஸ்கிருதம் பயிலும்படி பெற்றோர் கட்டளைக்கும் தன்னிஷ்டத்திற்கும் வேண்டி நடந்தானே அப்பாஷையிலாவது பூரண பாண்டித்யம் அடைந்தானோ? இல்லவேயில்லை. எப்படியெனில், அவன் இப்பொழுது எஸ். எஸ். எல். ஸி. என்னும் மெட்ரிகுலேஷன் வகுப்பிற் படித்து முடியும்போது சம்ஸ்கிருதத்தில் கற்றுக்கொண்டிருப்பது எடுத்ததைத் தட்டித்தடவி வாசிக்கவேயொழிய வேறொன்றுமில்லை. உயர்ந்தது இருநூறு சுலோகங்கள். இராமாயணத்திலோ, பாரதத்திலோ, பஞ்சதந்திரக் கதைகளிலோ ஏற்பட்டிருக்கும். இவைகளைப் படித்து சம்ஸ்கிருதபண்டிதர் சொல்லிக் கொடுத்தவைகளைக் குட்டிப்பாடம் போட்டு வைத்திருப்பான். அதனையும் பரீட்சையான மறுநாளே மறந்துவிடுவான். இப்பொழுது சொல்வதெல்லாம் பெரும்பாலான பிள்ளைகளுக்கே யொழிய மிக்க அறிவுடைய ஒரு சிலருக்கன்று. அவர்கள் பள்ளிக்கூடத்தில் வாசித்தாலும் சரி, வேறு எந்த இடத்தில் வாசித்தபோதிலும் தாம் கல்வியில் முன்னேற்றமடையவேண்டுமென்று எண்ணுவர்களேயாயின், அவ்விதமே செய்வார்களென்பதிற் றடையில்லை. அவர்களைப் பற்றியும் பேசவில்லை. ஆகையினாலே இவன் கற்ற சம்ஸ்கிருதக் கல்வி இம்மட்டோடு நின்று பிரயோஜனமாவதில்லை. முக்கிய

மாக ஒன்று கவனிக்கவேண்டும். எந்தப் பாஷையானது பேச்சுவழக்கில், உலகவழக்கில் இல்லாமலிருக்கிறதோ அது எவ்விதம் பிரயாசமெடுத்துக் கொண்டபோதிலும் விருத்தியாவதில்லை. அதற்குக் காரணம் இப் பாஷையைப் பேசவேண்டிய அவசிய மேற்படாததால், தாங்கற்ற சொற்கள் மறக்க எற்படுவது இயற்கை. ஒருவன் கற்றதைத் திரும்பவும் உபயோகிக்காமலிருப்பானாயின் அவன் அதனை வெகு சீக்கிரத்தில் மறப்பது இயற்கை. அவ்விதமின்றி அதனைத் திரும்பத் திரும்ப உபயோகிப்பானாயின் அவன் அதனில் அதிக விருத்தியடைவான். இது இயற்கை. இதனை மாற்றுவது இயலாத காரியம். இவ்விதியால் இவன் கற்ற சம்ஸ்கிருத எழுத்துப் பேறு பிற்காலத்துக்குப் பிரயோஜனமற்றதாவதோடு எங்கள் பாட்டனார் இவ்வூர் சுரோத்திரியந்தார்; மைசூர் திவானாயிருந்தார்என்பதையொக்குமேயன்றி வேறு பயன்படுவதில்லை. (தொடரும்)

இலக்கணவிளக்க பரம்பரை

திருவாரூர். சோமசுந்தரதேசிகர்.

உ

திருச்சிற்றம்பலம்.

அறநெறி விளக்கம்.

கடவுள் வாழ்த்து.

உலகமும் பல்லுயிரு மொன்றி நிறைந்தோங்கி
யிலகுஞ்சிவ னெம்மிறை.

ஞானாசிரியர் துதி.

சிறப்புறும் பொன்னிசூழ்ந்த திருமிகுந் தருமைமேவிப்
பிறப்பெனுங் கடலினீந்திப் பேதையேன் முத்திசேர
இறப்பிலாப் பதங்கள்தாண்ட வெழிற்சிவ ஞானதேவன்
மறப்பிலா வருளைவாழ்த்தி மகிழுற நெறிசொல்வாமே.

நூல் :

சர்வலோகைக நாயகராயும், சர்வஜீவதயாபாமூர்த்தியாயு மிராநின்ற சாக்ஷாத் சிவபெருமானூர், சிற்றறிவுஞ் சிறுதொழிலு முடைய தம்மடிமைகளாகிய நமக்குப் பெறுதற்கரிய இம்மானி டப்பிறப்பை யளித்தருளியது செய்தற்கரிய சிரறஞ்செய் துய் தற்கேயாம். இவ்வறமோ ஈதற்றன்மையதாம். இவ்வீதலோ ஈசுவரன் பானிகழ்வதாம். இவ்வன்போ மெய்யுணர்வானிகழ்வ தாம். இவ்வுணர்வோ, பாசவுணர்வு, பசுவுணர்வு, பதியுணர்வு என மூவகையாம். 1. பாசவுணர்வாவது:— மெய் மனமுதலிய வைகளால் இவ்வுலகின்கண் நம்மை முற்செய் யூழ்வயத்தாற் பொருந்திய தாய், தந்தை, மனைவி, மக்கள், சுற்றம், மாடு, வீடு, பூமி முதலிய பாசங்களைத் தமதென்றுணரு முணர்வேயாம். 2. பசுவுணர்வாவது:— இவ்வுலகின்கண்ணுள்ள சராசரவுயிர்க ளெல்லாம் நம்முயிர்த்துணைகளா யுள்ள சுற்றங்களேயாமென் றுணரு முணர்வேயாம். 3. பதியுணர்வாவது:— பசு பாசங்க ளாகிய நம்மையும், இவ்வுலகங்களையும் ஆக்கி யளித் தழித்து மறைத்தருளுந் தோன்றாத் துணையாகிய கடவுளொருவனுள னென்றுணரு முணர்வேயாம். இனிப் பாசவுணர்வாற் பாசவன் பும், பாசவன்பாற் பாசவறமும், பசுவுணர்வாற் பசுவன்பும், பசு வன்பாற் பசுவறமும், பதியுணர்வாற் பதியன்பும், பதியன்பாற் பதியறமும் பல்குவதாம்.

பாசவறத்தாற் பாசப்பொருளும், பாசப்பொருளாற் பாச வின்பமும், பாசவின்பத்தாற் பாசவீடும், பசுவறத்தாற் பசுப் பொருளும், பசுப்பொருளாற் பசுவின்பமும், பசுவின்பத்தாற் பசுவீடும், பதியறத்தாற் பதிப்பொருளும், பதிப்பொருளாற் பதியின்பமும், பதியின்பாற் பதிவீடும் பலிப்பதாம். பாசவற மாவது:— முற்செய் வினைவயத்தால் தம்மைச்சேர்ந்த பாசங் களாகிய தாய், தந்தை, மனைவி, மக்கள், மாடு, வீடு, பூமி முத லியவைகளுக்குத் தம்மாலிட்டியபொருளைக் குறைவறக்கொடுத் தளித்தலேயாம்.

பசுவறமாவது:— இவ்வுலகின்கண் ணுள்ளனவாகிய எவ வுயிர்களும் தம்முயிர்த்துணைகளாயுள்ள சுற்றங்களாமென்று சுருதி யுக்தி யனுபவங்களால் நன்குணர்ந்து, நம்மாலீட்டிய பொருள்களை அவைகளுக்கு வேண்டியவாறு கொடுத்தளித்த லேயாம். பதியறமாவது:— பசு பாசங்களாகிய நம்மையும், இவ்வுலகினையும் பகுத்துணர்ந்து ஆக்கியளித்தழித்து மறைத் தருளவல்ல அருவுருவமாகிய பதியே நம்மையாண்டருளுமாறு திருவருளுருவுகொண்டு வந்த குருலிங்க சங்கமங்களைச் சிவ மென்றே கருதி, அச் குருலிங்க சங்கமங்களுக்கு மெய்யன் போடு நம்மாலீட்டியவுடற்பொருளாவி மூன்றினையுமொருங்கே கொடுத்துப் பணிபுரிதலேயாம்.

பாசவறத்தால் பாசப்பொருள்களாகிய மனைவி, மக்கள் மாடு, வீடு, பூமி முதலியவைகளும் பாசப்பொருள்களாற் பாச வின்பானுபவமிகுதலும், பாசவின்பானுபவ மிகுதியாற் பாச வின்பநிலை யன்றெனவுணர்ந்து அதனை வெறுக்கும் பாசவீடு மிகுதலும், பாசவீட்டாற் பசுவறமும், பசுவறத்தாற் பசுப்பொ ருள்களாகிய பல்லுயிர்கண்மிகுதலும், பசுப்பொருண் மிகுதியாற் பசுவின்பமாகிய இகபரவின்பமிகுதலும் பசுவின்ப மிகுதியாற் பசுவின்பமாகிய சுவர்க்காதி லோகங்களிற் சென்றனுபவிக்கு மின்பமும் நிலையன்றெனவுணர்ந் தவற்றை வெறுக்கும் பசு வீடும், பசுவீட்டால் அப்பசுபாசங்களை யுண்ணின்றியக்கியாள வல்ல பதியாகிய கடவுளொருவனுளனென்று சுருதியுக்தியனு பவங்களாலுணர்ந்து, அவ்வறிவுருவமாகிய கடவுளே நம்மை யாண்டருளக் குருலிங்கசங்கமமாகிய திருவருளுருவுகொண்டு வந்ததென்றுணர்ந்து. நம்முடல்பொருளாவி மூன்றையுமொரு ங்கே கொடுத்து, நம்செயலற்று இறைபணிநிற்றலாகிய பதியற மும், அப் பதியறத்தாற் பதிப்பொருளாகிய எண்குணமிகுத லும், அப் பதிப்பொருளாற் பதியின்பமாகிய சிவானந்த மிகுத லும், அச் சிவானந்தமிகுதியாற் சிவானந்தாதீதமாகிய பதி வீடும், அப் பதிவீட்டாற் சிவப்பேறாகிய சிவசாயுச்சிய சுத் தாத்துவித முத்திப்பெருவாழ்வுறுதலுமாகும். ஆதலின், இவ்

வறத்தினலேயே பேரின்பமுத்தி யுண்டாகும். மற்ற முயற்சி களாற் பெருந்துன்பமும் பெரும்பழியுமேயுண்டாகும். இக் கருத்துப் பற்றியே நமது நாயனரும்,

"அறத்தான் வருவதேயின்பமற்—றெல்லாம்
புறத்த புகழு மில" திருக்குறள்.

எனக் கூறியருளினரென்க. (தொடரும்)

தரு. ஞா. சண்முகத்தம்பிரான்.
வேளூர்.

நமது கடமை.

" அரிதரிது மானிடராதலரிது " என்று ஔவைமூதாட்டியாரும், " எண்ணரிய பிறவிதனின் மானிடப்பிறவிதான் யாதினும் அரிதரிதுகாண் " என்று ஸ்ரீமத் தாயுமானவரும், அருளியவாறு மானிடஜன்மத்தையடைந்த நாம், எவ்வளவோ தாழ்ந்த பிறப்புக்களிலெல்லாம் பிறந்து பிறந்திளைத்து, அநேக துன்பங்களை யனுபவித்து, பிறகு மேலானதும், கிடைத்தற் கரியதுமாகிய இம் மானிடஜன்மத்தை யடைந்திருக்கிறோம். இத்தகைய (கிடைத்தற்கரிய) மனிதஜன்மத்தைப் பெற்ற நாம், இவ்வுலகின்கண் எதற்காகப் பிறந்தோம்? இங்குச்செய்ய வேண்டிய இன்றியமையாத கடமை ஏதாவது உண்டா ? அப் படிக்கிருக்குமாயின் அது என்ன ? அதை நாம் எவ்வாறு செய் வது என்ற விஷயங்களையறிந்து, அவற்றை ஒழுங்குறச் செய்ய வேண்டியதற்காகவே இந்த மானிடஜன்மத்தில் ஐம்பொறிகளி னும் அறியும் அறிவோடு சித்தத்தாலறியும் அறிவாகிய ஆறு வது அறிவும் ஈசுவரனுல் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிவைப்பெற்ற நாம் இதைக்கொண்டு,

"முப்போதுமன்னம் புசிப்பதுவுந் தூங்குவது மோகத்தினல்
செப்போதிளமுலை யாருடன் சேரவுஞ் சீவன்விடு
மப்போது கண்கலக்கப் படவு மமைத்தாய்"

என்றபடி பொருள்தேடுவதும், பெண்டுபிள்ளைகளையடைவதும், உண்பதும், உறங்குவதுமாகக் காலங்கழிக்கும் பக்ஷத்தில், நமக்கும், விலங்கு, பறவைமுதலியபிராணிகளுக்கும் யாதொரு வித்யாசமுங் கூறமுடியாது. ஏனெனில், அவைகளும் நம்மைப்போலவே ஆகாரத்தை உண்பதும், நித்திரைசெய்வதும், போகங்களையனுபவிப்பதுமாகிய காரியங்களைச்செய்துகொண்டுதானிருக்கின்றன. ஆகவே, இத்தகைய விஷயங்களுக்காக நமக்கு இந்த ஜன்மத்தையும், அறிவையும் ஈசுவரன் கொடுக்கவில்லை என்றும், ஆனால் இவற்றைவிட மிக முக்கியமாக நாம் செய்யவேண்டிய கடமை ஏதோ இருக்கிறதென்றும் ஏற்படுகிறது.

அத்தகைய கடமைதான் எது என்று நிதானத்துடன் யோசிக்கப் புகுந்தோமாகில், ஏதோ முன்செய்த நல்வினையின் சேஷத்தினாலோ, தீவினையின் சேஷத்தினாலோ இந்த ஜன்மம் கிடைத்துவிட்டதென்று; இப்பொழுது கிடைத்த இந்தஜன்மத்தைக்கொண்டு பிறவிக்குக்காரணமாகிய வினைகளையொழித்து, இனி இவ்வுலகில் பிறக்காதவண்ணம் செய்துகொள்ள வேண்டியதே நமது கடமை என்றும் ஏற்படுகிறது.

என்ன வேலையைச் செய்தால், இனி இவ்வுலகில் பிறக்காமல் பேரின்பமடையலாம் என்று விசாரிக்குங்காலத்தில், பல விதமான விடைகள் கிடைக்கின்றன. சிலர் சரியையினாலென்றும், சிலர் கிரியையினாலென்றும், சிலர் யோகத்தினாலென்றும், சிலர் ஞானத்தினாலென்றும் முறைமேபே விடைபகர்வார்கள். சரியையாதி மார்க்கங்களினாலே திருவருளைப் பெற்றுய்வது நிச்சயமாக இருப்பினும், அவை தற்காலத்தில் யாவராலும் எளிதில் செய்து பயன்பெறக் கூடியதென்று சொல்லமுடியாது. மேலும், யுகபேதங்களை அனுசரித்து மார்க்கங்கள் வேறுபடுவதாகவுமிருக்கின்றன. கிருதயுகத்தில் தியானத்தினாலும், திரேதாயுகத்தில் யாகாதிகிரியைகளினாலும், துவாபரயுகத்தில் அர்ச்சனையினாலும் மோக்ஷத்தையடைகிறார்கள். கலியுகத்தில் ஈசு

வரநாமங்களை பக்தியோடு உச்சரிப்பதினாலேயே அவனருளைப் பெற்றுத் துன்பத்திற்கு நிலைக்களமாகிய பிறவிப்பிணியை நிவர்த்தி செய்துகொள்ளுகிறார்கள் என்று நூல்கள் கூறுகின்றன. ஆகையால் இந்தயுகத்தில் கடவுளின் திருநாமங்களை பக்தியோடு உச்சரிக்கவேண்டியதுதான் இன்றியமையாத கடமையாகிறது.

பக்தியாவது:—சலனமில்லாத மனதை இஷ்டமானதோர் ஈசுவரமூர்த்தியிடம் அர்ப்பணம் செய்துவிடுவது. இதற்கு ஈசுவரனிடத்துள்ள அன்பே முக்கியகாரணமாகும். ஈசுவரன் ஆன்மாக்களிடத்துள்ள அன்பே திருமேனியாக உடையவர். ஆதலால் அவரை வழிபடுவதற்கும் அன்பே இன்றியமையாத கருவியாகும்.

"அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே."

(திருமந்திரம்)

அன்பில்லாத வழிபாடு வெளிச்சமில்லாமல் இருளைநீக்க முயல்வதையே ஒக்கும். ஒருவன் கற்ற கல்வியினாலாவது, கேள்வியினாலாவது, வேறு எவ்விதத்தினாலாவதுமட்டும், ஈசுவரகிருபையைப் பெறுவது முடியாத காரியமாகும். ஆனால், அவனிடத்துள்ள அன்பின் முதிர்ச்சியினாலேயே அவனருளைப் பெறுவது சாத்யமாகும். பக்தியின் பெருமை அளவுகடந்தது. பக்தி ஒன்றிற்கே ஈசுவரன் வசப்படுகின்றார். இதனாலேயே,

"பக்திவலையிற் படுவோன் காண்க"

என்றார் மணிவாசகப்பெருமானும். பக்தர்களுக்கு சாத்யமாகாத காரியம் ஒன்றுமே கிடையாது.

(தொடரும்)

E. K. கிருஷ்ணமூர்த்தி அய்யர்.

குங்குலியக்கலய நாயனர் சரித்திரம்.

இப்புண்ணியபூமியாகிய சோழமண்டலத்தில் ஜனங்களுக்கு அறிவு, நல்லொழுக்கம், பக்தி இவைகளைப் புகட்ட உதித்த உத்தமபுருஷர் அநேகர். அவர்கள் ஒவ்வொருவரும் இல்லறத்திலிருந்து குற்றமற்ற நடத்தையாலே விசேஷ ஈசுவரானுக்ரஹத்தைப் பெற்று, அஞ்ஞானமென்ற இருளைப்போக்கி, ஈசுவரனது பாதாரவிந்தத்தை அடையலாமென்பதை விளக்கியிருக்கின்றனர். பின் சொல்லப்படும் சரித்திரம் அவ் வுத்தமபுருஷர்களின் சரித்திரத்திலொன்ருகும்.

சோழராஜ்யத்தில் இந்தியர்களெல்லோராலும் புண்யநதியெனக் கொண்டாடப்படும் காவிரிநதிக்கரையில் கடவூர் என்ருெரு சிவக்ஷேத்திரமுண்டு. இது தற்காலத்தில் திருக்கடையூரென்று வழங்கப்படும் ஊரேயாகும். அது மாயூரத்திலிருந்து கிழக்கே பன்னிரண்டுமைல் தூரத்திலுள்ளது. அங்குள்ள சிவாலயம் மிகப் பிரசித்திபெற்றது. நீரே கதியென்று தம்மைக் கட்டிக்கொண்ட பக்தசிரோமணியாகிய மார்க்கண்டேயரைக் காக்கும்பொருட்டுத் தம்மையும் அவ் வருமைப் பக்தனையும் பாசக்கயிற்றினுல் சுற்றின காலனைக் கோபாவேசங்கொண்டு வீழ்த்திய காலகாலனைத் தரிசனஞ்செய்வோர்யாவரும் மெய்ம்மறந்து திருவருளை வியந்துநிற்பர் என்பதற்கு ஐயமேயில்லை.

இவ்வூரில் ஓர் உத்தம அந்தணருக்குச் சத்புத்திரராக அவதரித்து, மிக்க ஐசுவரியத்தைப் பெற்றிருந்த இப்பிராமண சிரேஷ்டராகிய கலயர் விசேஷ பக்தியுடன் சிவாலயத்திற்குத் தவருது தினந்தோறும் சென்று, ஆலயமுழுதும் மணமிகுந்த குங்குலியப்புகையால் நறுமணங் கமழச்செய்து சுவாமிதரிசனம் செய்தலையே எப்போதும் தவருது செய்துவருவாராயினர். எவ்வித அசௌகரியம் ஏற்படினும், கோவிலுக்குச் சென்று, குங்குலியத்தூபம் போட்டுச் சிவனடியைத் தொழுதலை நீங்கார். ஆனல்,

" பொன்னுங் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தஞ் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும் நலிந்தாலு முத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து " என்பதற்கேற்ப

எத்துணைத் துன்பத்தால் நலிவிக்கப்பட்டாலும், தங்கள் நற்குணத்திற் சிறிதும் மாறப்பெறார் என்பதை உலகமறிந்து உய்விக்கும்பொருட்டுப் போலும். இறைவன் திருவருளால் இவரதுசெல்வம் வரவரக் குன்றிக்கொண்டே வந்தது. அப்பொழுதும் கலயர் சிறிதும் மனத்தளர்வடையாது வழக்கம்போல் கோவில்திருப்பணியைச் செய்துவந்தனர். வரவர வறுமை மேலிட, வீடுகளையும், சாமான்களையும், மனைவியின்நகைகளையும், விற்று ஜீவிக்கலானார். இவ்வளவு சிரமதசையையடைந்தும், தம் திருப்பணியாகிய குங்குலியதூபம் போடுதலை மறந்திலர். வீட்டிற்குவேண்டியசாமானகள்வாங்கப்பொருளில்லையேயென்னுங்கவலை அவர் மனத்துள் தோன்றவில்லை. குங்குலியம்வாங்க நிதியில்லையே என்னுங் கவலை அவர் மனத்தை வாட்டியது. இவர் வாட்டந்தனைக் கண்ணுற்ற மனைவியார் கிரகநிலைமையைக் குறித்து வருந்துகிறார்போலுமென் றெண்ணினர். தம் நாயகர் படும் துன்பம் சகியாது தாலியைக்கழற்றி மிகுந்த வணக்கத்துடன், " நாத ! இதோ என் பொற்றாலியிருக்கிறது. இதை எடுத்துச்சென்று, விற்று வீட்டிற்கு வேண்டிய பொருளைச் சேகரித்துவாருங்கள் " என்றார்.

பொற்றாலியைக் கையிலெடுத்துக் கடைவீதிசென்ற பிராமணர் எதிரில் பொதியை எடுத்துக்கொண்டு ஒரு வர்த்தகன் வந்தான். அப்பொதியாதென வினவ, அவன் உயர்ந்த குங்குலியப்பொதி யென்றனன். அதைக் கேட்டவுடன்,

" ஆறுசெஞ் சடைமேல் வைத்த வங்கணர் பூசைக்கேற்ற
நாறுங் குங் குலியமீதே னின்று பெற்றே னல்ல
பேறுமற் றிதன்மே லுண்டோ பெறுப்பேறு பெற்றுவைத்து
வேறினிக்கொள்வ தென்னென் றுரைத்தெழும் விருப்பின்
மிக்கார் "

என, " ஆஹா! இக் குங்குலியம் சுவாமிக்குத் தூபம்போடுவதற்கு வேண்டிய பொருளல்லவா? இதைவிட மேலான பண்டம் நாம் வாங்கக்கூடியது யாது? பகவானுடைய கைங்கரியத்திற்கு இன்றியமையாத பொருளல்லவா இது? நம்மனத்திற்கிசைந்த மனையாட்டியைத்தந்தபெருமானுடைய கைங்கர்யத்திற்கு அவள் அணிந்திருந்த தாலி பயன்பட என்ன புண்ணியம் செய்தனள்! ஆபரணங்களுக்கரசாகிய இம்மாங்கல்யம் மற்றைய ஆபரணங்களைப்போல் பயனின்றிப் போகாது, நித்தனது ஆலயத்தை மணக்கச் செய்யும் மேல் நிலையையடைந்ததே! மணவணியாகிய இது மணவணியேயாயிற்று! எனப் பலவாறாக நினைத்துப் பேரானந்தத்தில் மூழ்கி, கையிலிருந்த தாலியை வியாபாரியிடம் கொடுத்துப் பண்டமாற்றினர். பிறகு அச்சுமையையெடுத்துக்கொண்டு ஆலயத்துட்சென்று சுவாமியைத் தரிசித்து தூபமிட்டுத் தியானத்திலிருந்தார். (தொடரும்)

V. சந்தானமய்யங்கார், B A., L.T.

௳

முதற்கண்டராதித்த சோழதேவர்.

இவ்வரசர்பெருமான் சோணாட்டில், தஞ்சையில் வீற்றிருந்து அரசுபுரிந்த சோழமன்னர்களுள் ஒருவர்; முதற்பராந்தக சோழதேவரது இரண்டாவது புதல்வர். இவரது தமையனாகிய இராஜாதித்தர் என்பார் தக்கோலத்தில், கி. பி. 949-ல் இரட்ட அரசனாகிய கன்னரதேவனோடு புரிந்த பெரும்போரில் இறந்தமையின், பராந்தகசோழதேவருக்குப் பின்னர் இவர் சோழமண்டலத்தின் அரசராக அரியணையேறினர். அப்போரின் பயனாக, பகைவனாகிய கன்னரதேவன் சோழமண்டலத்தின் வடக்கிற் சிலபகுதிகளைக் கவர்ந்துகொண்டமையின், எஞ்சியவற்றையே கண்டராதித்தர் ஆண்டுவந்தனர்.

சோழ மன்னர்கள் ஒருவர்பின் ஒருவராகத் தரித்துக் கொண்டு வந்த இராஜகேசரி, பரகேசரி என்ற பட்டங்களுள் இவர் இராஜகேசரியென்னும் பட்டம் புனைந்தவர். கண்டராதித்தச் சதுர்வேதிமங்கலம் என்ற ஒரு நகரைக் காவிரியின் வடகரையில் இவர் தம்பெயரால் அமைத்தாரென்று லேய்டன் நகரச் செப்பேடுகள் கூறுகின்றன. அதுவே, இப்போது திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள கண்டராதித்தம் என்ற ஊர் போலும்.

இவர் தமிழ்மொழியிற் சிறந்த புலமையும், சிவபெருமானிடத்துப் பேரன்பும் வாய்ந்தவரென்பது இவர் பாடியுள்ள திருவிசைப்பாவினால் தெரிகிறது. திருவிசைப்பாவில் இவர் பாடிய பதிகங்கள்பல இருத்தல்வேண்டும். ஆனால், தற்காலத்திலுள்ளது 'மின்னுருருவ மேல் விளங்க' என்னும் தொடக்கத்துக் கோயிற்பதிகம் ஒன்றே. அப் பதிகத்தின் எட்டாவது பாடலில், 'வெங்கோல் வேந்தன் றென்னாடுமீழமுங் கொண்ட திறற்— செங்கோற்சோழன் கோழிவேந்தன் செம்பியன்' என்று தம் தந்தையாராகிய முதற்பராந்தகசோழதேவரைக் குறித்திருப்பதோடு, அவர் தில்லையம்பலத்திற்குப்பொன்வேய்ந்ததையும் கூறியுள்ளனர். அன்றியும், பத்தாம்பாடலில், "காரார்சோலைக் கோழிவேந்தன் றஞ்சையர்கோன் கலந்த—வாராவின்சொற் கண்டராதித்தன்" என்று தம்மையே இவர் குறித்திருப்பது அறியத்தக்கதொன்றாம்.

இஃதிங்ஙனமாக, சோழவமிச சரித்திரம் எழுதிய அறிஞர் து. அ. கோபிநாதராயர் அவர்கள் திருவிசைப்பா பாடியவர் இரண்டாங் கண்டராதித்தரென்று அந்நூலில் வரைந்துள்ளனர்; அதற்கு அவர் கூறுங்காரணமாவது:—கண்டராதித்தர் முதல் இராஜராஜசோழதேவர் தஞ்சையில் எடுப்பித்த இராசராசேச்சுரத்தைத் தம் திருவிசைப்பாவில் பாடியிருக்கின்றனர். முதல்இராஜராஜசோழதேவர், முதற்கண்டராதித்தரது தம்பியாகிய அரிஞ்சயன் என்பாரது பெயரர்; சுந்தரசோழரென்று

அழைக்கப்பெறும் இரண்டாம் பராந்தகசோழரது புதல்வர்; ஆதலால், தஞ்சை இராசராசேச்சுரத்தைத் திருவிசைப்பாவிற் பாடியவர் முதற்கண்டராதித்தரெனக்கொள்ளின், அவர், தம் தம்பியின் பெயரது ஆட்சிக்காலத்தும் இருந்தவராதல்வேண்டும். ஆனால், முதற்கண்டராதித்தர் இறந்தபின்னரே அவரது தம்பியாகிய அரிஞ்சயனென்பார் செங்கோல் கைக்கொண்டனரென்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன; எனவே, திருவிசைப்பாவைப்பாடியவர் முதற்கண்டராதித்தர் ஆகார் என்பது. திருவிசைப்பாவிலுள்ள பதிகங்களுள், கண்டராதித்தர் இயற்றியது ஒன்றேயாகும். அப்பதிகமும் கோயிலெனப்படுந் திருச்சிற்றம்பலத்தைப் புகழ்வது. ராயர் அவர்கள் கூறியவாறு கண்டராதித்தர் இராசராசேச்சுரத்தைப் பாடிய பதிகம் திருவிசைப்பாவிற் காணப்படவில்லை. ஆனால், திருவிசைப்பாவிலுள்ள இராசராசேச்சுரப்பதிகம் கருவூர்த்தேவர் பாடியதாகும். கங்கைகொண்டசோழீச்சுரத்தைப் பாடியவரும் இக் கருவூர்த்தேவரேயாவர். ஆகவே, கருவூர்த்தேவரியற்றிய இராசராசேச்சுரப் பதிகத்தைக் கண்டராதித்தர் இயற்றினரெனப் பிழையாகக் கொண்டு, அதனால், திருவிசைப்பாப் பாடியவர் இரண்டாம் கண்டராதித்தர் என்று ராயர் அவர்கள் எழுதியிருப்பது தவறுடைத்தென்க. எனவே, முதற்கண்டராதித்தரே திருவிசைப்பா பாடியவரென்பது திண்ணம்.

(தொடரும்)

தி. வை. சதாசிவபண்டாரத்தார்.

உ

"சிவப்பிரகாசன்" தாசி மோகனம்.

எல்லா வளங்களும் நிறைந்து செழிப்புற்றோங்கிய சிங்கார புரியென்னும் திவ்யநகரத்தில் அனேக வீதிகளுண்டு. அவைகளில் சிறந்துள்ளதும், மங்களகரமான மாளிகைகளால் வரிசை

பெற்றதுமான மகாரதவீதி அல்லது சைவர்கள் வீதியென வழங்கப்பெறும் வீதியில் நடுநாயகம்போல் விளங்கும் பெரிய மாளிகை வீட்டில் வசிப்பவரும் மகாஉத்தமகுணத்தையுடைய வரும், சர்வஜனங்களுங் கொண்டாடும்படியானவரும், பிரபுவு மாகிய தருமலிங்கம்பிள்ளையென்ற தனவந்தருக்கு முதல் மனை விக்கு மாணிக்கவாசகன் என்ற 7வயதுள்ள ஒருவனும், மனை விஇறந்தபின் இரண்டாவதுமனைவிக்குச் சிவப்பிரகாசனென்ற 4வயதுள்ள ஒருவனும் பிறகு சிந்தாமணி யென்னும் பெண் குழந்தை ஒன்றும் உள்ளன. அவர்களுடன் செல்வமாக வசி த்துவருநாளில் அம்மணியம்மாளென்னும் இரண்டாவதுமனைவி யும் மரித்தனள். பிறகு இச்சிறுவர்களை மிக்கஅருமையோடுவளர் த்துவந்து சின்னுளைக்கெல்லாம் நல்ல உபாத்தியாயரைக்கொ ண்டு ஓதுவிக்கும்படி பள்ளிக்கூடத்தில் வைக்க வாசித்து வந்தார்கள்.

மூத்தகுமாரனுகிய மாணிக்கவாசகன் நன்ருய்ப் படித்து வந்தான். இளையவனுகிய சிவப்பிரகாசன் விளையாட்டுத் தொ ழிலில் மிகத்தேற்சியுள்ளவனுக இருந்தான். உபாத்தியாயர் எவ்வளவு பிரயாசை யெடுத்தும் பயனில்லாமற் போயிற்று. தாயற்ற சிறுவனென்று செல்வமாகவளர்த்துவந்தது, இவனது கல்விக்கு முற்றிலும் விரோதமாயிற்று. சிந்தாமணி அம்மாளு க்கு வயது 5 நிறைந்ததால் அப்பெண்மணியையும் பள்ளிக்கூட த்தில் வைத்து கல்விகற்கும்படி செய்யவே அப்பெண்மணியும் நாளுக்குநாள் கல்வியிற் சிறந்து தீங்கறவாசித்துவந்தனள்.

சிவப்பிரகாசன் அனேக துஷ்டர்களோடு சேர்ந்து, பந் தாடுவது, கம்பாடுவது, சீட்டாடுவது, செல்லாங்கோடு, குதி கொம்பு முதலியன ஆடுவதும், குளம் ஆறுகளில் நீந்துவதும், இம்மாதிரிக்குள்ள துஷ்டத்தனத்தையுடையவனுக இருந்தான். ஆனல் படிப்பில்லாதில்லை. எவ்வளவு உபாயமாகத் தெரியலா மோ அவ்வளவு எழுதப்படிக்கக் கற்றிருந்தான்.

மாணிக்கவாசகன் நன்ருய்ப் படித்து, தகப்பனர் கவனிக் குப்படியான வீட்டுக்குடித்தன வேலைகளையும், தங்கள் ஏஜண்டு

கள் நடத்திவரும் கிராமக்காரியங்களையும், கணக்கு முதலான
வைகளையும் பரிசீலனை செய்துவந்தான். இவருக்குப் பதினாறு
வயதானதாலும் வீட்டில் சுபமங்கலியஸ்திரீயேயில்லாதிருந்
ததாலும், விவாகஞ்செய்யவேண்டுமென்றும் சிந்தாமணிக்கும்
ஒன்பது வயதானதால் இவளுக்கும் விவாகஞ் செய்ய
வேண்டுமென்றும் பெருமுயற்சி செய்தார். ஆனால் பெண்ணிற்
குத்தக்க வரன் அமையாததால் மாணிக்கவாசகம்பிள்ளைக்குமட்
டும் விவாகஞ்செய்வதாக நிச்சயமாகியது. அதாவது ராமநக
ரம் கதிர்வேற்பிள்ளைகுமாரத்திசௌ. கண்ணம்மாளைபாணிக்கிரக
ணஞ்செய்வதாகபத்திரிகைகளனுப்பி, உறவினர்முதலியோரும்
வந்துசேர்தார்கள். பெண்ணும் அவர்களைச்சேர்ந்த இனத்தார்
களும் வந்தார்கள். விவாகமும் வெகுசிறப்பாக நடக்க ஆரம்
பித்தது.

உதைய முகூர்த்த மாகையால் குறிப்பிட்ட லக்னத்தில்
மாங்கல்ய தாரணமாகி செய் சடங்குகள் யாவும் செய்து
வந்திருந்த பிராம்மணர்களுக்குப் பூரி முதலிய தானங்கள் வழங்
கியும், பந்துஜனங்கள் பிரபுக்கள் உத்தியோகஸ்தர்கள் முதலிய
சகலருக்கும் நல்லுணவுகள் செய்து மாலை பாட்டுக்கச்சேரி
முதலியன நடந்தன. மறுநாள் இரவு 7மணிக்கெல்லாம் உள்ளூர்
சித்திரவீதி தாசி ஜகதாம்பாள் மகள் அழகியவல்லியும், அவள்
தங்கை மோகனம் இவ்விருவரதுசதுர்க்கச்சேரி ஆரம்பித்தது.

இதையறிந்தசிவப்பிரகாசம் பிள்ளை தான் ஒரு மாப்பிள்ளை
யைப்போலஅலங்காரம்பண்ணிக்கொண்டு ஒருவரும்நிகரிலாது
தன் காலிக்கூட்ட சினேகிதரோடும் வெகு அடம்பரத்தோடும்
சதுர்க்கச்சேரிக்கு வந்துட்கார்ந்தார். தாசிகள் நட்டுவன்
முதலியவர்கள் கும்பிடவே மெய்மறந்தவராக நடனமாடுபவளு
களைக் கவனித்திருந்தார்.

சதுர்க்கச்சேரியில் பணம்போடுவதாயுள்ள பழமைப்படி
சபையிலுள்ளவர்கள் தாசிகளைக் கூப்பிட்டு பணத்தைக்கொடுப்
பதும், உடனே அவர்கள் இரண்டுகையாலும் அன்னவர்களைத்
தலை வணங்கிக் கும்பிடுவதையும் சிவப்பிரகாசம்

பார்த்து சரி நம்மிடத்தில் பணமில்லை இருந்தால் நாமும் பணம் போடலாம். அவள்களும் சமீபத்தில் வந்துபோவாளுகள். இதற்கொரு உபாயம் தேடவேண்டுமென்றும் யோஜித்தான். அதாவது தனக்குச் சமீபத்தில் ஒரு தாம்பாளத்தில் ஒவ்வொருவர்களும் தரும் பணங்களைக் கொண்டுவந்து தாசிகள் போடுவதைப் பார்த்து, அதில் ஒருவருமறியாமல் தாம்பாளத்திலிருக்கும் பணத்தை எடுக்கவெண்ணி அத்தாம்பாளத்தின் சமீபத்தில் அணுகினான். முழுத்தந்திரத்தையும் உபயோகப்படுத்தி பத்துரூபாய்நோட்டுஒன்றும் ஐந்துரூபாய் பணமுங் கைப்பற்றி மெல்ல எழுந்திருந்து கொட்டகைப் பந்தலுக்கு வெளியே அவர்களது சவுக்கண்டியில் தன் சினேகிதர்களோடு அழகியவல்லி வகையறுப் போகும்வழியை எதிர்பார்த்துக்கொண்டும் உலாத்திகொண்டுமிருந்தார். (இவ்வைபவம் இப்போதுங் காணலாம்.) வெகுநேரங்காத்திருந்தார். பிறகு கேளிக்கை நின்றவுடன் நட்டுவன்கள் சகிதம் தாசிகளும் புறப்பட்டாளுகள். சிவப்பிரகாசனோஇவளுகளின்வரவைஎதிர்பார்த்திருந்தவராகையால் அங்குள்ளவேலைக்காரனைக்கூப்பிட்டு தாசிகளை அழைத்துவரச்செய்தான். அழகியவல்லி சின்னபிள்ளை கூப்பிட்டார்களென்றவுடன் தன் ஜதையிலுள்ளவர்களைப் போகச் சொல்லிவிட்டு, நட்டுவ ஜகநாதன், தாயார், தங்கையோடு புறப்பட்டாள். இவன் ஆடம்பரத்தைக்கண்ட தாசிகள் சும்மா இருப்பார்களா, கண்ணென்னும் வலையை வீசிக்கொண்டு மிக நாணத்தோடு ஒதுங்கிப் பதுங்கி எதிரேவந்து கும்பிட்டாளுகள். சிவப்பிரகாசமும் பெரும் அதிருஷ்டம் வந்ததெனக் கருதி வரவேண்டும் உட்காரவேண்டுமென்றான். அழகியவல்லி மோகனத்தைமட்டும் உட்காரச்சொல்லி அவளுடைய சிகையில் வைத்துப்பின்னியிருந்த கல்லிழைத்த தலைஜோடிப்பை அவிழ்த்துக்கொண்டிருக்கும்போது மோகனத்தை அசையாமல் காட்டுமென்று தலையில் சூட்டினாள் மோகனம் கண்ணைப் பிசைய ஆரம்பித்தாள். (தொடரும்)

விசேஷக் குறிப்புகள்.

இந்தியாவில் தபால்கள் பட்டுவாடா:— ஒவ்வொரு வருஷமும் பிரிட்டிஷ் இந்தியாவில் சுமார் 72-கோடி கடிதங்களும், 9½-கோடி பத்திரிகைகளும் தபால்மூலியமாகச் செல்லுகின்றனவாம்.

வைரங்களைச் சோதித்தல்:— வைரங்களுடைய லக்ஷணங்களை சோதிக்க அவைகளின்மேல் மூச்சுவிட்டால் அவைகள் சிறிதுநேரம் பிரகாசம் குறைந்திருக்கும். அப்போது அவைகளிலுள்ள மாசு மறுக்களை சுலபத்திற் கண்டுபிடிக்கமுடியும். வைரத்தின்மேல் மூச்சுவிட்டால் அது உண்மையான வைரமானால் சீக்கிரம் பிரகாசம் அடையும். போலிவைரம் சற்று தாமதித்துத் தெளிவு அடையுமாம்.

ஜப்பானியர்கள் தங்கள் குடும்பத்தில் மரணம்நேர்ந்தால், கூலிக்கு அழுபவர்களைக்கொண்டு சகல உத்தரகிரியைகளையும் செய்வது வழக்கமாம். துக்கத்தில் சம்பந்தப்பட்ட நெருங்கின பந்துக்களும் இறந்த தினத்திலேயே காபிக்கடைகளிற்போய்ச் சந்தோஷமாகப் பேசிக்கொண்டு காபி அருந்துவார்களாம்.

பாஷை.

உலகத்திலுள்ள எல்லா பாஷைகளிலும் கொரியாபாஷை கற்றுக்கொள்வது அதிகக் கஷ்டமாம். சீனபாஷையில் அநேக ஐரோப்பிய பாதிரிமார்கள் தேர்ச்சி அடைந்திருந்தபோதிலும், கொரியாபாஷையைப் படிப்பது அவர்களுக்கு மிகக் கஷ்டமாயிருக்கிறதாம்.

உலகத்தின் மொத்தஜனத்தொகை 1849500000 (நூற்றெண்பத்துநான்கு கோடியே தொண்ணூற்றைந்து லக்ஷம்) ஆம்.

குண்டுசிப்பட்டரை:— இந்தப் பட்டரைகளிலெல்லாம் பெரியது இங்கிலாந்தில் பர்மிங்காம் பட்டணத்திலுண்டு. அதிலே தினமொன்றுக்கு 37000000 அதாவது மூன்றுகோடி எழுபதுலக்ஷம் குண்டூசிகள் செய்யப்படுகின்றனவாம்.